# ஒரு பார்வை - பகுதி 1

ஸூரா அல்அன்ஆமின் இந்த பிரிவு அல்லாஹ்வின் ஆற்றல், அறிவு மற்றும் கருணையை விளக்குகிறது. தெளிவான அத்தாட்சிகள் அவர்கள் முன் இருந்தும் சத்தியத்தை நிராகரிக்கும் காஃபிர்களை எச்சரிக்கிறது. மறுமை நாளில் அவர்களின் நிலைமைகளின் காட்சிகள் காட்டப்பட்டுள்ளது. இவ்வுலக வாழ்க்கை வீணும், விளையாட்டுமேயன்றி வேறில்லை! எனினும் பயபக்தியுடையோருக்கு மறுமை இல்லமே சிறந்ததது.

## தராவிஹ் - 6: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 6, அல்அன்ஆம்; வசனம்: 1 - 41; பிரிவு: 1 - 4

1. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே வானங்களையும், பூமியையும் படைத்தான். இருள்களையும், ஒளியையும் அவனே உண்டாக்கினான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 1)

2. உங்களது இரகசியத்தையும், பரகசியத்தையும் நீங்கள் செய்து கொண்டிருப்பவற்றையும் அவன் நன்கு அறிவான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 1)

3. (நபியே!) காகிதத்தில் எழுதப்பட்ட ஒரு வேதத்தை நாம் உமக்கு அருளியிருந்து, அதனை நிராகரிப்போர் தம் கைகளால் தொட்டுப் பார்த்திருந்தால், அப்போதும்கூட அது பகிரங்கமான சூனியம்தான் என்றே அவர்கள் சொல்லியிருப்பார்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 1)

4. மேலும் அவர்கள் ஒரு வானவரை சாட்சியாக கேட்கின்றனர். அவ்வாறே, ஒரு வானவரை நாம் அனுப்பி வைத்திருந்தாலும், அவர்கள் நம்பப் போவது இல்லை. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 1)

5. கருணை புரிவதை அல்லாஹ் தனக்குத் தானே கடமையாக்கிக் கொண்டிருக்கின்றான். அதனால் தான் உங்கள் குற்றத்திற்காக இதுவரை அவன் உங்களை தண்டிக்காதிருக்கிறான். மறுமை நாளில் நிச்சயமாக அவன் உங்களை ஒன்றுதிரட்டுவான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 2)

6. இறை மறுப்பாளர்கள் மறுமையில் நரகத்துக்குமுன் நிறுத்தப்படும் பொழுது, அவர்கள், 'எங்களை திரும்ப உலகுக்கு அனுப்ப முடியாதா? அவ்வாறு அனுப்பப்பட்டால் நாங்கள் நிச்சயமாக இறை வசனங்களை மறுக்காமல் விசுவாசிகளாக மாறிவிடுவோம்' என்று புலம்புவர். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 3)

7. அதற்கு அல்லாஹ் கூறுவான்: "அப்போதும் அவர்கள் தடை செய்யப்பட்டவற்றிலேயே மீண்டும் ஈடுபடுவார்கள். நிச்சயமாக அவர்கள் பொய்யர்களாகவே இருக்கின்றனர்". (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 3)

8. இவ்வுலக வாழ்க்கை வீணும், விளையாட்டுமேயன்றி வேறில்லை! எனினும் பயபக்தியுடையோருக்கு மறுமை இல்லமே சிறந்தது. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 4)

9. எவர்கள் அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்யாக்குகின்றனரோ அவர்கள் இருள்களில் சிக்கியுள்ள செவிடர்களாகவும், ஊமைகளாகவும் இருக்கின்றனர். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 4)

10. "உங்களுக்கு அல்லாஹ்வின் வேதனை வந்துவிட்டால் அல்லது விசாரணைக் காலம் வந்துவிட்டால், அல்லாஹ் அல்லாதவரையா நீங்கள் உதவிக்கு அழைப்பீர்கள்?" (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 4)

11. “மாறாக, அவனையே நீங்கள் அழைப்பீர்கள். அப்போது, அவன் நாடினால், நீங்கள் எதற்காக அவனை அழைப்பீர்களோ அத்துன்பத்தை அவன் நீக்கிவிடுவான். நீங்கள் (அவனுக்கு) இணை கற்பித்தவற்றை அப்போது மறந்து விடுவீர்கள்”. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 2

**அல்லாஹ் மக்களை துன்பத்தில் வழி நடத்தவும், தன்னை நோக்கி மக்களை அழைத்து வரவும் தூதர்களை அனுப்பினான். ஆனால் சிலர் தங்கள் இதயங்களை கடினப்படுத்தி, ஷைத்தானால் தவறாக வழிநடத்தப்பட்டனர். அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன் என்பதை இந்தப் பகுதி மேலும் எடுத்துக்காட்டுகிறது. இரவில் உறங்கச்செய்து, பகலில் விழிக்கவைப்பது அல்லாஹ்வின் செயல். அல்லாஹ்வின் வசனங்களைப் பற்றி வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்க எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது.**

## தராவிஹ் - 6: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 6, அல்அன்ஆம்; வசனம்: 42 - 70; பிரிவு: 5 - 8

1. **நபியே! உமக்கு முன்னிருந்த பல சமுதாயத்தாருக்கும் தூதர்களை நாம் அனுப்பி வைத்தோம். அந்த மக்கள் பணிந்து வரவேண்டும் என்பதற்காக வறுமையாலும், நோயாலும் அவர்களைத் தண்டித்தோம். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 5)**

2. **நம்முடைய தண்டனை அவர்களிடம் வந்தபோதாவது அவர்கள் பணிந்திருக்க வேண்டாமா? ஆனால் அவர்களுடைய இருதயங்கள் இறுகிவிட்டன. அவர்கள் செய்து கொண்டிருந்ததையே, ஷைத்தான் அவர்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 5)**

3. **“அல்லாஹ் உங்களுடைய செவிப்புலனையும், பார்க்கும் சக்தியையும் பறித்துவிட்டு, உங்கள் இருதயங்களின் மீது முத்திரையிட்டு விட்டால், அல்லாஹ்வையன்றி அவற்றைத் திருப்பிக் கொண்டுவரும் கடவுள் யார்?” என்று (நபியே!) நீர் கேளுங்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 5)**

4. **அல்லாஹ் அருள் புரிவதைத் தனக்குத் தானே கடமையாக்கிக் கொண்டான். உங்களில் ஒருவர் தெரியாமல் பாவம்**

செய்துவிட்டு, பின்னர் அதிலிருந்து விலகி நற்செயல்கள் செய்தால், அவரை அல்லாஹ் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக மன்னிப்பவனும், கருணையாளனுமாக இருக்கின்றான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 6)

5. அவன் அறியாமல் ஒரு இலைகூட உதிருவதில்லை. பூமியின் அடர்ந்த இருளில் புதைந்து கிடக்கும் சிறிய வித்தும் அவனுடைய பதிவுப் புத்தகத்தில் இல்லாமலில்லை. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 7)

6. அவனே உங்களை இரவில் உறங்கச் செய்து உங்களின் உயிர்களை (ஆன்மாவை) கைப்பற்றுகிறான். பின்னர் குறிப்பிட்ட தவணை நிறைவு பெறுவதற்காக பகலில் உங்களை எழுப்புகிறான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 7)

7. உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிட்டால், வானவர்கள் அவரின் உயிரை கைப்பற்றுவார்கள். பின்னர் உண்மையான எஜமானாகிய அல்லாஹ்விடமே அவர்கள் கொண்டு வரப்படுவார்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 8)

8. அல்லாஹ், தன் வேத வசனங்களை திரும்ப திரும்ப எடுத்துரைக்கிறான், மக்கள் உண்மையைப் புரிந்துகொள்வதற்காக. ஆனால் அவர்களோ அதை நிராகரிக்கின்றனர். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 8)

9. அல்லாஹ்வின் வசனங்களைப் பற்றி வீண் விவாதம் செய்பவர்களிடமிருந்து நீங்கள் விலகி விடுங்கள். அவர்கள் அதைவிட்டு வேறு விஷயங்களில் கவனம் செலுத்தும் வரையில் நீர் அவர்களைப் புறக்கணித்து விடுங்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 8)

10. அவர்கள் பயபக்தியுடையவர்களாக ஆகும் பொருட்டு, அவர்களுக்கு குர்ஆன் மூலம் நல்லுபதேசம் செய்யுங்கள். எந்த ஆத்மாவும் தன்னுடைய தீயசெயல்களின் காரணமாக மறுமையில் அழிவுக்கு உட்பட்டு விடக்கூடாது என்பதற்காக நல்லுபதேசம் செய்யுங்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 8)

## **ஒரு பார்வை - பகுதி 3**

**இப்ராஹீம் (அலை) அவர்கள் மறைந்து போகும் நட்சத்திரங்கள், சந்திரன், சூரியன் ஆகியவை தம்முடைய ரப்பாக இருக்க முடியாது எனக்கூறி, உருவ வழிபாட்டை எதிர்த்தார்கள். வானங்களையும் பூமியையும் படைத்த அல்லாஹ் ஒருவனே வணக்கத்துக்கு உரியவன் எனக் கூறினார்கள். இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு நேர்வழியில் நடக்கும் சந்ததிகளை அல்லாஹ் கொடுத்தான். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மூலம், அல்லாஹ்வின் மகிமைகளை எடுத்துக்காட்டி, அனைத்து மக்களுக்கும் வழிகாட்டப்பட்டது.**

## **தராவிஹ் - 6: (ரக்அத் 9 முதல் 12)**

### **ஸூரா - 6, அல்அன்ஆம்; வசனம்: 71 - 100; பிரிவு: 9 - 12**

1. **இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் தந்தை ஆஸரை நோக்கி, 'நீர் சிலைகளை தெய்வங்களாக வணங்குகிறீர்களா?' என கேட்டு, 'நிச்சயமாக நீரும், உம்முடைய சமுதாயத்தாரும் பகிரங்கமான வழிகேட்டில் இருப்பதை நான் காண்கிறேன்' என்று கூறினார்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 9)**

2. **இப்ராஹீம் (அலை) காலத்தில் மக்கள், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் மற்றும் சிலைகளை வணங்கி வந்தனர். அவர்களை திருத்தும் பொருட்டு, ஒரு நாள் இரவு அம்மக்களிடம் நட்சத்திரத்தைப் பார்த்து, 'இது என் இறைவன்' என கூறினார். பின்னர் அது மறைந்தவுடன், 'மறையக் கூடிய ஒன்றை நான் இறைவனாக்க விரும்பவில்லை' என்றார். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 9)**

3. **மறுநாள் சந்திரனைக் காட்டி அவ்வாறு கூறினார். பின்னர், சூரியனைக் காட்டியும் அவ்வாறே கூறினார். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 9)**

4. அவைகளும் மறைந்துவிடவே, ‘வானங்களையும், பூமியையும் எவன் படைத்தானோ, அந்த ஒருவனை மட்டுமே நான் வணங்குவேன். நான் இணைவைப்பவன் அல்லன்’ என்று கூறினார். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 9)

5. இதனால் அம்மக்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் விவாதம் செய்தார்கள். அதற்கு அவர்கள், ‘நிச்சயமாக இறைவன் எனக்கு நேரான வழியை அறிவித்து விட்டான். என் இறைவன் நாடாத வரை, நீங்கள் இணை வைத்து வணங்கும் எந்தவொன்றும் என்னை எதுவும் செய்ய முடியாது. அவைகளுக்கு நான் பயப்பட மாட்டேன்’ என்றார்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 9)

6. இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இஸ்ஹாக் (அலை) அவர்களையும், அவருடைய மகன் யாகூப் (அலை) அவர்களையும் அல்லாஹ் சந்ததிகளாக்கினான். மேலும் அவர்களை நேரான வழியில் செலுத்தினான். அதற்கு முன்னர் நூஹ் (அலை) மற்றும் அவர்களுடைய சந்ததிகளாகிய தாவூத் (அலை), சுலைமான் (அலை), ஐயூப் (அலை), யூசுப் (அலை), மூஸா (அலை) மற்றும் ஹாரூன் (அலை) அவர்களையும் நேரான வழியில் செலுத்தினான். மேலும் ஜகரிய்யா (அலை), யஹ்யா (அலை), ஈஸா (அலை), இல்யாஸ் (அலை), இஸ்மாயில் (அலை), அல்யஸஉ (அலை), யூனூஸ் (அலை) மற்றும் லூத் (அலை) ஆகியோர்களையும் மேன்மையாக்கி வைத்தான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 10)

7. நபியே! மேற்கூறியவர்களையே அல்லாஹ் நேர்வழியில் நடத்தினான். ஆகவே, அவர்களின் வழியையே நீர் பின்பற்றுவீராக! நபியே கூறுவீராக! “குர்ஆனை அறிவிப்பதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியும்

கேட்கவில்லை. இது உலகத்தார் யாவருக்கும் ஒரு நல்லுபதேசமாகும்". (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 10)

8. அல்லாஹ்தான் வித்துக்களையும், விதைகளையும் பிளக்கச் செய்து முளைக்க வைப்பவன். இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் அவனே வெளிப்படுத்துகிறான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 12)

9. அவனே மேகத்திலிருந்து மழையை இறக்கினான். பலவகை தாவரங்கள், காய்கனிகளை முளையச் செய்தான். பேரீச்சம் பழங்கள், திராட்சை தோட்டங்கள், மாதுளை, அத்திப்பழம் போன்றவைகளை அவனே விளைவிக்கிறான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 12)

10. அவை (பூத்துக்) காய்ப்பதையும், பின்னர் கனிந்து பழமாவதையும் நீங்கள் உற்று நோக்குங்கள்! நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு இவற்றில் பல சான்றுகள் உள்ளன. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 12)

## ஒரு பார்வை - பகுதி 4

**அல்லாஹ்விடமிருந்து தெளிவான சான்றுகள் வந்துள்ளன. நம்பிக்கை கொள்ள விரும்புவோருக்கு நேர்வழி காட்டுகின்றன; அதே நேரத்தில் உண்மையைக் கண்டு குருடர்களாக இருப்பவர்கள் தமக்குதாமே தீங்கிழைக்கின்றனர். காஃபிர்கள் தெளிவான சான்றுகள் காட்டப்பட்டால் தாங்கள் நம்புவோம் என்று கூறுகின்றனர். ஆனால் அவர்கள் இன்னும் உண்மையை நிராகரிக்கிறார்கள். மறுமை நாளில், ஜின்கள் மற்றும் மனிதர்கள் தங்கள் செயல்களின் விளைவுகளை சந்தித்தே ஆவார்.**

## தராவிஹ் - 6: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 6, அல்அன்ஆம்; வசனம்: 101 - 140; பிரிவு: 13 - 16

1. **உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து பல ஆதாரங்கள் வந்துள்ளன. யார் அவற்றை (கவனித்து)ப் பார்க்கிறாரோ அது அவருக்கே நன்மையாகும், யார் (அவற்றை) கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறாரோ, அது அவருக்கே கேடாகும். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 13)**

2. **அல்லாஹ் அல்லாத வேறு யாரைத் தெய்வங்களாக அவர்கள் வணங்குகின்றார்களோ, அவற்றை நீங்கள் திட்டாதீர்கள். அதனால் அவர்கள் அறிவின்றி, வரம்பு மீறி அல்லாஹ்வை திட்டுவார்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 13)**

3. **தங்களுக்கு ஏதேனும் ஓர் அற்புதம் வந்துவிடுமானால், 'அதை நாங்கள் நிச்சயமாக நம்புவோம்' என அவர்கள் அல்லாஹ்வின்மீது ஆணையிட்டு சத்தியம் செய்கின்றனர். (நபியே! அவர்களிடம்) நீர் கூறும்: "அற்புதங்கள் யாவும் அல்லாஹ்விடமே இருக்கின்றன". (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 13)**

4. அவை அவர்களுக்கு வந்தாலும், அவர்கள் ஈமான் கொள்ளமாட்டார்கள். நாம் அவர்களுடைய உள்ளங்களையும் பார்வைகளையும் பிறழச்செய்வோம். தங்களுடைய வழிகேட்டிலேயே தடுமாற அவர்களை நாம் விட்டுவிடுவோம். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 13)

5. நாம் அவர்களிடம் வானவர்களை இறக்கிவைத்தாலும், இறந்தவர்களை அவர்களிடம் (வந்து) பேசும்படிச் செய்தாலும், எல்லாப் பொருட்களையும் அவர்களின் கண்ணெதிரே கொண்டுவந்து ஒன்று திரட்டினாலும், அல்லாஹ் நாடினாலன்றி அவர்கள் ஈமான் கொள்ளப்போவதில்லை. (அல்லாஹ் யாரையும் கட்டாயப்படுத்தி அவனை நம்ப வைக்க விரும்பவில்லை). (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 14)

6. அல்லாஹ் மறுமை நாளில் மனிதர்களையும், ஜின்களையும் ஒன்று சேர்த்து, ஜின்களை நோக்கி, 'நீங்கள் மனிதர்களில் அநேகரைக் கெடுத்து உங்களுடன் சேர்த்துக் கொண்டீர்கள் அல்லவா?' என கேட்பான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 15)

7. அதற்கு மனிதர்களில் அவர்களுடைய நண்பர்கள், "எங்கள் இறைவா! எங்களில் சிலர் சிலரைக்கொண்டு பலன் அடைந்திருக்கின்றோம். (இறுதியில்,) நீ எங்களுக்கு நிர்ணயித்த தவணையை நாங்கள் அடைந்து விட்டோம்" என்று கூறுவார்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 15)

8. அப்போது அல்லாஹ், "நீங்கள் வாழப்போகும் இடம் நரகம் தான். அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் அதில் நிரந்தரமாக இருப்பீர்கள்" எனக் கூறுவான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 15)

9. மறுமையில் அல்லாஹ் மனிதர்களையும், ஜின்களையும் நோக்கி, 'உங்களுக்கு நம்முடைய தூதுவர்கள் வரவில்லையா? அவர்கள் நம் வசனங்களை எடுத்துக்ககூறி, உங்களை

எச்சரிக்கவில்லையா?’ என கேட்பான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 16)

10. அதற்கு அவர்கள், “ஆம்! ஆனால் இவ்வுலக வாழ்க்கை எங்களை மயக்கி விட்டது. நாங்கள் இறைமறுப்பாளர்களாகவே இருந்தோம்” என்று தங்களுக்கு எதிராக அவர்களே சாட்சியம் கூறுவர். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 16)

11. யாவருக்கும் அவர்களின் செயல்களுக்குத் தக்க பதவிகள் உண்டு. அவர்களின் செயல்கள் பற்றி அல்லாஹ் நன்கு அறிவான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 16)

12. உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட அந்த இறுதி தீர்ப்புநாள் வந்தே தீரும். அதை யாரும் தடுத்து விட முடியாது. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 16)

## ஒரு பார்வை - பகுதி 5

**அல்லாஹ் உங்கள் நன்மைக்காக பல்வேறு தாவரங்களையும், விலங்குகளையும் படைத்துள்ளான். அறுவடை செய்யும் காலத்தில் அதற்குரிய கடமையான தர்மத்தை (ஸகாத்தைக்) கொடுத்து விடுங்கள். ஊதாரித்தனத்தைத் தவிர்க்குமாறும், ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டாம் என்றும் அறிவுறுத்துகிறான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் என்றும், நீதி, கருணை மற்றும் நேர்மையை கடைபிடிக்க அறிவுறுத்தினார்கள். ஒவ்வொரு நல்ல செயலுக்கு பத்து மடங்கு வெகுமதி அளிக்கப்படும் எனவும், ஒரு தீய செயலுக்கு ஒரு தண்டனை மட்டுமே கொடுக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 6: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 6, அல்அன்ஆம்; வசனம்: 141 - 165; பிரிவு: 17 - 20

1. **கொடிபடர்ந்த மற்றும் கொடிபடராத தோட்டங்களையும், பேரீத்த மரங்களையும், பல விதவிதமான காய், கனி, தானியங்களையும், (தோற்றத்தில்) ஒரே விதமாகவும் (சுவையில்) வெவ்வேறான ஆலிவ், மாதுளை ஆகியவற்றையும், அல்லாஹ்வே படைத்தான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 17)**

2. **அவற்றின் பலனை உண்டு அனுபவித்துக் கொள்ளுங்கள். அறுவடை செய்யும் காலத்தில் அதற்குரிய கடமையான தர்மத்தை (ஸகாத்தைக்) கொடுத்து விடுங்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 17)**

3. **வீண்விரயம் செய்யாதீர்கள். ஏனென்றால், வீண்விரயம் செய்வோரை அல்லாஹ் நேசிப்பதில்லை. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 17)**

4. அல்லாஹ் விலங்குகளை கொடுத்திருக்கிறான். அவற்றில் சில சுமை சுமக்கக்கூடியவை; மற்றும் சில வேறு பயன்பாட்டுக்கானவை. அல்லாஹ் அளித்த (உணவுகளில் இருந்து நீங்கள் உண்ணுங்கள்). நீங்கள் ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிவிடாதீர்கள். அவன் உங்களுக்கு பகிரங்கமான எதிரி ஆவான். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 17)

5. ஆண் அல்லது பெண் இனத்திலுள்ள ஆடு, மாடு, ஒட்டகங்கள் உண்ண தடை செய்யப்பட்டவை என சிலர் பொய் உரைக்கின்றனர். இவர்கள் அல்லாஹ்விற்கு எதிராக பொய்கூறி, மக்களை திசை திருப்புகின்றனர். இவர்கள் அநீதியாளர்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 17)

6. எவை தடை செய்யப்பட்டவை என்பதை மக்களிடம் சொல்லுமாறு, அல்லாஹ் நபி இடம் கூறுகிறான்: அதாவது: ‘அல்லாஹ்வுக்கு இணை வைக்காதீர்கள். பெற்றோருக்கு நன்மை செய்யுங்கள். வறுமைக்குப் பயந்து உங்கள் பிள்ளைகளை கொலை செய்யாதீர்கள். வெளிப்படையான அல்லது ரகசியமான, எந்த மானக்கேடான செயலையும் நெருங்காதீர்கள். எந்த உயிரையும் நியாயமின்றி கொலை செய்யாதீர்கள்’. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 19)

7. அநாதைகளின் செல்வத்தை நியாயமின்றி அணுகாதீர்கள். அளத்தல், நிறுத்தல் ஆகியவற்றில் நீதியோடு நிறைவு செய்யுங்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 19)

8. அல்லாஹ், எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் சிரமப்படுத்துவது இல்லை. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 19)

9. நிச்சயமாக இதுவே அல்லாஹ்வுடைய நேரான வழியாகும். ஆகவே இதனையே பின்பற்றுங்கள். இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 19)

10. யார் ஒரு நன்மை செய்கிறாரோ, அவருக்கு அதைப்போல் பத்து மடங்கு நன்மை கிடைக்கும். ஆனால் யார் ஒரு தீமையைச் செய்கிறாரோ, அவருக்கு அதைப்போல் ஒரு தண்டனை மட்டுமே கொடுக்கப்படும். அவர்கள் அநீதி இழைக்கப்படமாட்டார்கள். (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 20)

11. நபியே! கூறுங்கள்: ‘என் தொழுகை, என் (குர்பானி) வழிபாடு, என் வாழ்வு, என் மரணம் ஆகிய அனைத்தும் உலகத்தைப் படைத்து, காத்து வரும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை’. (ஸூரா - அல்அன்ஆம்; பிரிவு: 20)

---